# பகுதி-அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

Questions : 1–100 Total Marks : 150

---

1. பாரதிதாசன் 'குடும்பவிளக்கு' என்னும் நூலில் எப்பகுதியில் 'விருந்தோம்பல்' எனும் தலைப்பில் கவிதை படைத்துள்ளார்?

(A) ஐந்தாம் பகுதி (B) முதல் பகுதி

(C) நான்காம் பகுதி (D) இரண்டாம் பகுதி

(E) விடை தெரியவில்லை

2. தண்டமிழ் ஆசான் என யார்? யாரைப் பாராட்டினார்?

(A) கம்பர் – சடகோபரை

(B) இளங்கோவடிகள் – சீத்தலைச் சாத்தனாரை

(C) சீத்தலைச் சாத்தனார் – இளங்கோவடிகளை

(D) பாரதியார் – கம்பரை

(E) விடை தெரியவில்லை

3. "இஸ்லாமியக் கம்பர்" எனப் போற்றப்படுபவர்

(A) அப்துல் மரைக்காயர் (B) முகமதுலெப்பை

(C) கடிகை முத்துப் புலவர் (D) உமறுப்புலவர்

(E) விடை தெரியவில்லை

4. எட்டுத் தொகை நூல்களில் 'ஓங்கு' என்னும் அடைமொழி பெற்ற நூல்

(A) குறுந்தொகை (B) கலித்தொகை

(C) நற்றிணை (D) பரிபாடல்

(E) விடை தெரியவில்லை

γ

5. "மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்

மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து"...

மேற்கண்ட பாடலடிகளில் அமைந்துள்ள மோனைச் சொற்களைக் கண்டறிக.

(A) மனிதரெலாம், மனோபாவம்
(B) வானைப்போல் விரிவடைந்து
(C) மனிதரெலாம், அன்புநெறி
(D) மனோபாவம் வானைப்போல்
(E) விடை தெரியவில்லை

6. வஞ்சகன் முதலைக் கண்ணீர் வடித்தான்.

இந்த உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருள் யாது?

(A) மெய்யழுகை – உண்மையான அழுகை
(B) எண்ணித் துணியாதார் – நல்லவன் வடிக்கும் கண்ணீர்
(C) பொய்யழுகை, பொய்யான நட்பு, தீமை தரக்கூடிய கண்ணீர்
(D) பொய்யில்லாத அழுகை
(E) விடை தெரியவில்லை

7. கீழ்க்கண்ட உவமைக்கு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க

"உடலும் உயிரும் போல"

(A) ஒற்றுமையின்மை
(B) மகிழ்ச்சி
(C) வெளிப்படைத்தன்மை
(D) ஒற்றுமை
(E) விடை தெரியவில்லை

8. பிறவினை வாக்கியத்தைக் கண்டறிக.

(A) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார்
(B) நிலவன் புத்தகத்தைப் படித்தார்
(C) நிலவன் பாடம் நடத்தினார்
(D) நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தார்
(E) விடை தெரியவில்லை



9. "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா

இடம் பெற்ற இலக்கண நூல்

(A) நன்னூல்
(B) அகத்தியம்
(C) தொல்காப்பியம்
(D) இலக்கண விளக்கம்
(E) விடை தெரியவில்லை

10. பொருத்துக.

| | திணை | | தெய்வம் |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. | வருணன் |
| (b) | முல்லை | 2. | இந்திரன் |
| (c) | மருதம் | 3. | திருமால் |
| (d) | நெய்தல் | 4. | முருகன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

11. தம் வீரர்களுடன் போர்க்களத்தில் போரிடும் போது சூடும் பூ எதுவென அறிக

(A) உழிஞை பூ
(B) வஞ்சிப் பூ
(C) தும்பைப் பூ
(D) நொச்சிப்பூ
(E) விடை தெரியவில்லை

12. 'மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்' என்று பாராட்டப்படும் கவிஞர்

(A) சுரதா
(B) வாணிதாசன்
(C) முடியரசன்
(D) அப்துல் ரகுமான்
(E) விடை தெரியவில்லை

13. பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை யாருடைய படைப்புகள்?

(A) பாரதிதாசன் கவிதைகள்
(B) சுரதாவின் கவிதைகள்
(C) ந. பிச்சமூர்த்தி கவிதைகள்
(D) கண்ணதாசன் கவிதைகள்
(E) விடை தெரியவில்லை

14. 'சேரமான் காதலி' எனும் புதினத்திற்காக சாகித்திய அகாடமி விருதுபெற்ற திரைப்படக் கவிஞர் யார்?

(A) கண்ணதாசன்
(B) மு. மேத்தா
(C) நா. காமராசன்
(D) நா. முத்துக்குமார்
(E) விடை தெரியவில்லை

15. பாரதிதாசன் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்குக் கொடுக்கப்பட்ட விருது

(A) சாகித்திய அகாடமி விருது
(B) குடியரசுத் தலைவர் விருது
(C) சோவியத் நாட்டு விருது
(D) தாமரைத் திரு விருது
(E) விடை தெரியவில்லை



16. கீழ்காணும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் "உத்திரவேதம்" என அழைக்கப்படும் நூல்

(A) திரிகடுகம்
(B) இனியவை நாற்பது
(C) திருக்குறள்
(D) முதுமொழிக்காஞ்சி
(E) விடை தெரியவில்லை

17. அரியவற்றுள் எல்லாம் அரிதே, ——————
பேணித் தமராக் கொளல்

(A) சிறியவரைப்
(B) பெரியாரைப்
(C) உறவினரை
(D) நண்பனை
(E) விடை தெரியவில்லை

18. தட்டிப் போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லாம – இப்பழமொழியின் பொருள்

(A) ஆள் பற்றாக்குறை
(B) உண்பவர்கள் பலர்
(C) நேரமின்றி உழைப்பது
(D) ரொட்டி பற்றாக்குறை
(E) விடை தெரியவில்லை

19. பழமொழிகள்
"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
– இப்பழமொழி அமைந்த சரியான தொடரைத் தேர்ந்தெடு

(A) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நோயற்ற வாழ்வு வாழ்வோம்
(B) நோயற்ற வாழ்வு வாழ்வோம் குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து
(C) குறைவற்ற செல்வம் என்பதை உணர்ந்து நோயற்ற வாழ்வு வாழ்வோம்
(D) நோயற்ற வாழ்வே குறைந்த செல்வம் என்பதை உணர்ந்து நோயுற்ற வாழ்வு வாழ்வோம்
(E) விடை தெரியவில்லை

20. 'இடர் உற மறையோரும் எரியுறு மெழுகானார்' எனவரும் பாடலில் 'இடர்' - என்பதின் எதிர்ச்சொல்

(A) துன்பம்
(B) இன்பம்
(C) மேன்மை
(D) மாதவர்
(E) விடை தெரியவில்லை

21. பிரித்து எழுதுக

பாசிலை

(A) பசுமை + இலை
(B) பாசு + இலை
(C) பாசி + இலை
(D) பைசு + இலை
(E) விடை தெரியவில்லை

22. பைங்கூழ் - பிரித்தெழுதுக

(A) பசிய + கூழ்
(B) பைம் + கூழ்
(C) பை + கூழ்
(D) பசுமை + கூழ்
(E) விடை தெரியவில்லை

23. புதுக்கவிதையின் தந்தை என போற்றப்படுபவர்

(A) ந. பிச்சமூர்த்தி
(B) பாரதிதாசன்
(C) கண்ணதாசன்
(D) வைரமுத்து
(E) விடை தெரியவில்லை



24. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | நட்சத்திரக் குழந்தைகள் | 1. | கல்கி |
| (b) | கணையாழியின் கனவு | 2. | பி.எஸ். ராமையா |
| (c) | பிரபந்த கானம் | 3. | ந. பிச்சமூர்த்தி |
| (d) | கொலு பொம்மை | 4. | மௌனி |

சரியான விடையைத் தெரிவு செய்க.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

25. மோகனா என்னும் பாலசரஸ்வதி பரதநாட்டியத்திற்காக எந்த வயதில் காஞ்சிபுரத்தில் மேடை ஏறினார்?

(A) 10 வயதில்
(B) 7 வயதில்
(C) 12 வயதில்
(D) 16 வயதில்
(E) விடை தெரியவில்லை

26. நாடகக்கலையை மீட்டெடுப்பதே தனது குறிக்கோள் என்று கூறியவர்

(A) கந்தசாமி
(B) ந. முத்துசாமி
(C) வேலுச்சாமி
(D) அழகர்சாமி
(E) விடை தெரியவில்லை

27. 'காந்திமகான் கதை' எனும் இசை நூலின் ஆசிரியர்

(A) வேழ வேந்தன்
(B) பெ. தூரன்
(C) கொத்த மங்கலம் சுப்பு
(D) தமிழழகன்
(E) விடை தெரியவில்லை

28. ‘அறுவர்க் கிளைய நங்கை’ இறைவனை ஆடல் கண்டருளிய நங்கை எனப்படுபவள் யார்?

(A) மாரியம்மன்
(B) துர்க்கை
(C) திருமகள்
(D) பிடாரி
(E) விடை தெரியவில்லை

29. கீழ்கண்ட நூல்களுள் எட்டுத்தொகை நூல்

(A) நான்மணிக்கடிகை
(B) இன்னாநாற்பது
(C) கலித்தொகை
(D) நாலடியார்
(E) விடை தெரியவில்லை

30. ‘பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்’ என்னும் தொடரில் ‘நால்’ என்பது எந்த நூலைக் குறிக்கிறது?

(A) நான்மணிக்கடிகை
(B) நாலடியார்
(C) களவழி நாற்பது
(D) கார் நாற்பது
(E) விடை தெரியவில்லை

31. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நீதியை வலியுறுத்தும் நூல்களின் எண்ணிக்கை

(A) 11
(B) 10
(C) 6
(D) 9
(E) விடை தெரியவில்லை

32. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) 70
(B) 38
(C) 25
(D) 36
(E) விடை தெரியவில்லை

33. இளமைப்பெயர் மரபுபிழை நீக்கியது

‘யானை’

(A) குஞ்சு
(B) பிள்ளை
(C) குட்டி
(D) கன்று
(E) விடை தெரியவில்லை

34. மரபுப் பிழை நீக்கி எழுதுக

இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

(A) கூரை மூடினர்
(B) கூரை வேய்ந்தனர்
(C) கூரை அமைத்தனர்
(D) கூரை இட்டனர்
(E) விடை தெரியவில்லை

35. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

(A) அமுதமொழி
(B) அடி மலர்
(C) பூ விரல்
(D) முத்துப்பல்
(E) விடை தெரியவில்லை

36. பொருந்த மரபுச் சொல்லைக் கண்டறிக

(A) வாழைக் கச்சல்
(B) முருங்கைச் சரடு
(C) மாவடு
(D) பலாமூசு
(E) விடை தெரியவில்லை

37. அழுக்காறுடையான் - எதிர்ச்சொல் தருக

(A) பொறாமை உடையவன்
(B) தூய்மை உடையவன்
(C) பொறாமையற்றவன்
(D) தூய்மை அற்றவன்
(E) விடை தெரியவில்லை

38. ‘தமிழ் தாத்தா’ - என அழைக்கப்படுபவர் யார்?

(A) உ.வே. சாமிநாதர்
(B) பாரதியார்
(C) கவிமணி தேசிய விநாயகம்
(D) நாமக்கல் கவிஞர்
(E) விடை தெரியவில்லை

39. இந்தியாவில் முதன் முதலாகத் தொழிலாளர் சங்கத்தைச் சென்னையில் துவக்கியவர்

(A) மறைமலை அடிகள்
(B) திரு.வி. கல்யாண சுந்தரனார்
(C) வையாபுரி
(D) ந.மு. வேங்கடசாமி
(E) விடை தெரியவில்லை

40. இதழ்களைக் குவிப்பதனால் பிறக்கும் எழுத்துக்கள்

(A) (அ, ஆ, இ, ஈ)
(B) (உ, ஊ, ஒ, ஓ, ஔ)
(C) (எ, ஏ, ஐ, அ)
(D) (அ, எ, ஏ, ஈ)
(E) விடை தெரியவில்லை

41. ‘தட்சிணசித்திரம்’ என்ற நூலுக்கு உரை எழுதியவர்

(A) கருணாகரத் தொண்டைமான்
(B) மகேந்திரவர்மன்
(C) இராசராசன்
(D) குலசேகர பாண்டியன்
(E) விடை தெரியவில்லை

42. தமிழ் ‘நாடகத் தந்தை’ எனப் போற்றப்படுபவர்

(A) தி.க. சண்முகனார்
(B) பம்மல் சம்பந்தனார்
(C) சங்கரதாசு சுவாமிகள்
(D) டி.எஸ். இராசமாணிக்கம்
(E) விடை தெரியவில்லை



43. “பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை”
– இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) பரிபாடல்
(B) கலித்தொகை
(C) நற்றிணை
(D) குறுந்தொகை
(E) விடை தெரியவில்லை

44. மலைபடுகடாம் நூலின் பாட்டுடைத் தலைவன்

(A) பெருங்கௌசிகனார்
(B) நன்னன்
(C) பாரி
(D) பாணர்
(E) விடை தெரியவில்லை

45. “கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்” என்று பெருமைப்படும் கவிஞர் யார்?

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கண்ணதாசன்
(D) கம்பதாசன்
(E) விடை தெரியவில்லை

46. “கம்பராமயணத்தில் துன்புள தெனின் அன்றோ சுகமுளது” – எனக் கூறுபவர் யார்?

(A) குகன்
(B) இராமன்
(C) அனுமன்
(D) சீதை
(E) விடை தெரியவில்லை

47. 'ஏ' என்னும் ஓரெழுத்து ஒருமொழி

(A) ஏடு
(B) ஏறுதல்
(C) அம்பு
(D) அடுப்பு
(E) விடை தெரியவில்லை

48. ஒலிப்பு முறைமை அறிந்து சரியான பொருள் எழுதுக.

'ஊண்' என்றால் ________; ஊன் என்றால் ________

(A) உணவு, இறைச்சி
(B) இறைச்சி, உணவு
(C) ஊனம், ஊஞ்சல்
(D) உள்ளம், உணவு
(E) விடை தெரியவில்லை

49. 'உளை' என்பதன் பொருள்

(A) பக்கம்
(B) பிடரி மயிர்
(C) அடுப்பு
(D) உதவு
(E) விடை தெரியவில்லை

50. "ஆஸ்பிடல்" என்ற சொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல்

(A) மருந்தகம்
(B) மருத்துவமனை
(C) மருத்துவ நிலையம்
(D) சுகாதார நிலையம்
(E) விடை தெரியவில்லை

51. Rational : என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க

(A) பகுத்தறிவு
(B) எழுத்தறிவு
(C) பட்டறிவு
(D) மெய்யறிவு
(E) விடை தெரியவில்லை



52. தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம் எது?

(A) தேசியக்கொடி
(B) தேசபக்தி
(C) கதரின் வெற்றி
(D) மனோகரன்
(E) விடை தெரியவில்லை

53. பொருத்துக.

(a) ஞானக் கண்ணாடி — 1. உரைநடை வடிவிலான சமயநூல்
(b) வேதவிளக்கம் — 2. நகைச்சுவைக் கதை நூல்
(c) தொன்னூல் விளக்கம் — 3. சமய நூல்
(d) பரமார்த்தகுரு கதை — 4. குட்டித் தொல்காப்பியம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

54. மொழி ஞாயிறு என்றழைக்கப்படுபவர்

(A) தாமோதரனார்
(B) தேவநேயப் பாவாணர்
(C) இளங்குமரனார்
(D) வரதராசனார்
(E) விடை தெரியவில்லை

55. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் சிலப்பதிகாரம் பற்றி எழுதிய கட்டுரை?

(A) குடிமக்கள் காப்பியம்
(B) தமிழ்க்காதல்
(C) தமிழர் திருமணம்
(D) வீரச்சுவை
(E) விடை தெரியவில்லை

56. பொருந்தாத இணையைத் தெரிவு செய்க

(A) பாசவர் – நெய்பவர்

(B) ஓசுநர் – எண்ணெய் விற்பவர்

(C) கண்ணுள் வினைஞர் – ஓவியர்

(D) மண்ணீட்டாளர் – சிற்பி

(E) விடை தெரியவில்லை

57. கூற்று 1 : கம்பர் பிறந்த தேரழுந்தூர் சோழநாட்டில் அமைந்துள்ளது.

கூற்று 2 : கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தப் புலவர்.

(A) கூற்று 1 மட்டும் சரி

(B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று இரண்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

58. கூலவாணிகம் செய்தவர்

(A) பரணர்

(B) இளங்கோவடிகள்

(C) கம்பர்

(D) சீத்தலைச்சாத்தனார்

(E) விடை தெரியவில்லை

59. அகநானூற்றில் பாலைத்திணைப் பாடல்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளன?

(A) 2, 8, 12, 18, 22... (இரண்டு, எட்டாக)

(B) 6, 16, 26, 36, 46... (ஆறு, ஆறாக)

(C) 1, 3, 5, 7, 9... (ஒற்றைப்படை எண்களாக)

(D) 4, 14, 24, 34, 44... (நான்கு, நான்காக)

(E) விடை தெரியவில்லை



60. ‘வா’ என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்

(A) வந்தவர்

(B) வந்து

(C) வந்த

(D) வந்தான்

(E) விடை தெரியவில்லை

61. ‘ஓடு’ – என்ற வேர்ச்சொல்லின் தொழிற் பெயரை கண்டறிந்து எழுதுக.

(A) ஓடுக

(B) ஓடுதல்

(C) ஓடிய

(D) ஓடிந்து

(E) விடை தெரியவில்லை

62. “நொந்தான்” சொல்லின் வேர்ச்சொல் யாது?

(A) நொ

(B) நொந்த

(C) நொந்து

(D) நோதல்

(E) விடை தெரியவில்லை

63. சரியான வேர்ச் சொல்லைக் காண்க

‘கொண்டிலன்’

(A) கொண்ட

(B) கொள்

(C) கொண்டனன்

(D) கொண்டு

(E) விடை தெரியவில்லை

64. தே-ஓரெழுத்து ஒரு மொழிக்கு உரிய பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

(A) கடவுள்

(B) தலைவன்

(C) அரசன்

(D) கள்வன்

(E) விடை தெரியவில்லை

65. உலகளாவிய தமிழர்கள் தம் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் தமிழை வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டு வருவது எதைக் காட்டுகிறது?

(A) மொழிப்பற்றை
(B) தேசப்பற்றை
(C) மதப்பற்றை
(D) சமயப்பற்றை
(E) விடை தெரியவில்லை

66. உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் ———— காரணமாகும்.

(A) சமநிலை
(B) வேறுபாடு
(C) ஓட்டம்
(D) இயக்கம்
(E) விடை தெரியவில்லை

67. கால்நடைகளுக்கு ஊறு நேராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்த இடங்களில் அமைந்த ஊர்கள் எவ்வாறு அழைக்கப்பெற்றன?

(A) பாக்கம்
(B) பட்டி
(C) குறிச்சி
(D) கரடு
(E) விடை தெரியவில்லை

68. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும் என்று கூறியவர்

(A) அறிஞர் அண்ணா
(B) அண்ணல் அம்பேத்கர்
(C) தந்தை பெரியார்
(D) மகாத்மா காந்தி
(E) விடை தெரியவில்லை



69. கலம்பகம் ———— வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

(A) பதினெட்டு
(B) தொண்ணூற்றாறு
(C) பத்து
(D) எட்டு
(E) விடை தெரியவில்லை

70. திருவிளையாடல் புராணத்தில் உள்ள காண்டங்கள்

(A) 5
(B) 3
(C) 7
(D) 6
(E) விடை தெரியவில்லை

71. சீறாப்புராணத்தில் உள்ள மொத்த விருத்தப்பாக்களின் எண்ணிக்கை

(A) 5027
(B) 5029
(C) 5023
(D) 5025
(E) விடை தெரியவில்லை

72. 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பாரசீகச் சொல்லுக்குரிய பொருள்

(A) வன்துறவி
(B) சமணத்துறவி
(C) தவத்துறவி
(D) தூயதுறவி
(E) விடை தெரியவில்லை

73. சரியான சொற்றொடரினைக் கண்டறிக

(A) பொதுமக்கள் எரித்தனர் தீயிட்டு அந்நியத்துணிகளை

(B) எரித்தனர் அந்நியத்துணிகளை தீயிட்டு பொதுமக்கள்

(C) தீயிட்டு எரித்தனர் பொதுமக்கள் அந்நியத்துணிகளை

(D) பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்

(E) விடை தெரியவில்லை

74. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.

(A) உயிரெழுத்துகள் பிறக்கின்றன பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு

(B) பிறக்கின்றன பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு உயிரெழுத்துகள்

(C) கழுத்தை இடமாகக் கொண்டு பன்னிரண்டும் உயிரெழுத்துகள் பிறக்கின்றன

(D) உயிரெழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன

(E) விடை தெரியவில்லை

75. பல்லாண்டு, முத்து, ஆமணக்கு, கொம்பு அரசன்

– அகர வரிசைப்படுத்தி எழுதுக.

(A) அரசன், ஆமணக்கு, கொம்பு, பல்லாண்டு, முத்து

(B) முத்து, பல்லாண்டு, ஆமணக்கு, கொம்பு, அரசன்

(C) ஆமணக்கு, அரசன், கொம்பு, பல்லாண்டு, முத்து

(D) கொம்பு, முத்து, ஆமணக்கு, அரசன், பல்லாண்டு

(E) விடை தெரியவில்லை

76. அகர வரிசையில் எழுதுக.

(A) சுற்றம், சிந்தனை, செய்யுள், சேரலாதன், சோம்பல்

(B) சிந்தனை, சேரலாதன், சோம்பல், செய்யுள், சுற்றம்

(C) சிந்தனை, சுற்றம், செய்யுள், சேரலாதன், சோம்பல்

(D) செய்யுள், சுற்றம், சிந்தனை, சேரலாதன், சோம்பல்

(E) விடை தெரியவில்லை



77. மரக்கலத்திற்குத் தமிழில் வழங்கும் பெயர்களில் ஒன்று

(A) வாரணம்

(B) பரவை

(C) புணரி

(D) திமில்

(E) விடை தெரியவில்லை

78. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் எவை தமிழகத்திலிருந்து அரசன் சாலமனுக்கு அனுப்பப்பட் பொருள்கள்?

(A) மிளகும், சந்தனமும்

(B) யானைத் தந்தமும், மயில் தோகையும்

(C) முத்தும், துகிலும்

(D) கரும்பும், அரிசியும்

(E) விடை தெரியவில்லை

79. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி

(A) ராணி மங்கம்மாள்

(B) அஞ்சலை அம்மாள்

(C) வேலு நாச்சியார்

(D) மூவலூர் இராமாமிர்தம்

(E) விடை தெரியவில்லை

80. உலகம் உருண்டையானது என்ற அறிவியல் சிந்தனை கொண்ட திருக்குறள்

(A) சுழன்றும் ஏர்பின்னது உலகம்

(B) ஆதிபகவன் முதற்றே உலகு

(C) உலகந் தழீஇயது ஒட்பம்

(D) எவ்வதுறைவது உலகம்

(E) விடை தெரியவில்லை

81. இரட்டுற மொழிதல் என்பது

(A) ஒரு சொல் பல பொருட்களைத் தருதல்

(B) ஒரு சொல் இரண்டு பொருள்பட அமைந்து வருதல்

(C) பல சொற்கள் ஒரு பொருள் தருதல்

(D) ஒரே சொல் மீண்டும் மீண்டும் பலமுறை வருதல்

(E) விடை தெரியவில்லை

82. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை பெயரில் பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாவட்டம் எது?

(A) கன்னியாகுமரி
(B) திருநெல்வேலி
(C) திருச்சி
(D) கோவை
(E) விடை தெரியவில்லை

83. மடந்தை பருவத்தின் வயது

(A) 8 – 11
(B) 12 – 13
(C) 14 – 19
(D) 20 – 25
(E) விடை தெரியவில்லை

84. கலம்பக உறுப்புகள்

(A) ஆறு
(B) எட்டு
(C) பதினெட்டு
(D) பன்னிரெண்டு
(E) விடை தெரியவில்லை



85. விடைக்கேற்ற வினா எது?

கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும்

குடக்கூத்து என்றும் கூறுவர்

(A) கரகாட்டம் என்றால் என்ன?

(B) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

(C) கரகாட்டம் எப்போது நடைபெறும்?

(D) கரகாட்டத்தினைப் போன்ற வேறு கலைகள் யாவை?

(E) விடை தெரியவில்லை

86. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

(A) திசைச் சொற்கள்
(B) வட சொற்கள்
(C) உரிச்சொற்கள்
(D) தொகைச் சொற்கள்
(E) விடை தெரியவில்லை

87. கீழ்க்கண்டவற்றுள் வினையெச்சம் அல்லாத ஒன்றைக் கண்டறிக.

(A) வெந்து
(B) மூடுபனி
(C) வெம்பி
(D) எய்தி
(E) விடை தெரியவில்லை

88. நாற்காலி என்பது எவ்வகைப் பெயர் என கண்டறிக.

(A) பொருட் பெயர்
(B) சினைப் பெயர்
(C) காலப் பெயர்
(D) பண்புப் பெயர்
(E) விடை தெரியவில்லை

89. இந்திய நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படுபவர்

(A) டாக்டர். அம்பேத்கர்

(B) தேவ நேய பாவாணர்

(C) முனைவர் இரா. அரங்கநாதன்

(D) இரா.பி. சேதுப்பிள்ளை

(E) விடை தெரியவில்லை

90. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு பிரதி எங்கு பாதுகாக்கப்படுகிறது?

(A) நடுவண் நூலகம்

(B) கன்னிமாரா நூலகம்

(C) தேசிய நூலகம்

(D) ஆவணக் காப்பகம்

(E) விடை தெரியவில்லை

91. தெய்வமணிமாலை திருவருட்பாவில் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது?

(A) மூன்றாம் திருமுறை

(B) ஐந்தாம் திருமுறை

(C) ஆறாம் திருமுறை

(D) நான்காம் திருமுறை

(E) விடை தெரியவில்லை

92. ‘ஏழைகளின் கற்பக விருட்சம்’ என்று அழைக்கப்படும் மரம்

(A) மாமரம்

(B) பலாமரம்

(C) தென்னை மரம்

(D) பனைமரம்

(E) விடை தெரியவில்லை



93. “கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று” எனப் பாடியவர் யார்?

(A) ஔவையார்

(B) திருமூலர்

(C) சுந்தரர்

(D) பாரதியார்

(E) விடை தெரியவில்லை

94. கல் மனத்தையும் கரையச் செய்யும் பக்திப் பாடல்களின் தொகுப்பு எனப் புகழப்படும் நூல் எது?

(A) போற்றித் திருவகவல்

(B) இரட்சணிய யாத்திரிகம்

(C) இரட்சணிய மனோகரம்

(D) இரட்சணியக் குறள்

(E) விடை தெரியவில்லை

95. களைப்பு நீங்க வேலை செய்வோர் பாடுவது

(A) குத்துப்பாடல்

(B) தொழில்பாடல்

(C) வரிப்பாடல்

(D) தனிப்பாடல்

(E) விடை தெரியவில்லை

96. “எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்” –
பாடலடிகள் இடம்பெறும் நூல்

(A) பாஞ்சாலிசபதம்

(B) மனோன்மணீயம்

(C) கலிங்கத்துப்பரணி

(D) புறநானூறு

(E) விடை தெரியவில்லை

97. 'தன்வினை' வாக்கியம் எது?

(A) செங்குட்டுவன் தங்கம் வாங்கினான்

(B) நான் பொய் பேசேன்

(C) நீ நன்றாகப் படி

(D) பொன்னி இன்னிசை பாட்டுவித்தாள்

(E) விடை தெரியவில்லை

98. தமிழ்ப் பாடத்தை முறையாகப் படி - இத்தொடர் எவ்வகை வாக்கியம் என கண்டறிக.

(A) கட்டளை வாக்கியம்

(B) செய்தி வாக்கியம்

(C) தனி வாக்கியம்

(D) உணர்ச்சி வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

99. போட்டியில் நான் முதற்பரிசு பெற்றிருப்பதாக ஆசிரியர் கூறினார் – எவ்வகை வாக்கியம் கூறு?

(A) தனி வாக்கியம்

(B) தொடர் வாக்கியம்

(C) நேர்க்கூற்று வாக்கியம்

(D) அயற்கூற்று வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

100. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறு தழுவுதல்

(A) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு எது?

(B) தொன்மையான வீரவிளையாட்டு ஏறு தழுவுதலா?

(C) ஏறுதழுவுதல் எம்மக்களின் வீர விளையாட்டு?

(D) தொன்மையான தமிழர்களின் வீரவிளையாட்டு எது?

(E) விடை தெரியவில்லை



# பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

வினாக்கள் : 101–200

**Questions : 101–200**

மொத்த மதிப்பெண்கள் : 150

Total Marks : 150

101. An important indicator of nutrition deficiency is

(A) Anaemia

(B) Obesity

(C) Kidney failure

(D) Night blindness

(E) Answer not known

ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கிய அறிகுறி

(A) இரத்தச் சோகை

(B) உடல் பருமன்

(C) சிறுநீரக செயலிழப்பு

(D) இரவு குருட்டுத்தன்மை

(E) விடை தெரியவில்லை

102. "__________" Award is conferred to honour librarians for the outstanding performance by Tamil Nadu Government

(A) Dr. S. R. Ranganathan

(B) Thiru. Kavimani

(C) Kamaraj

(D) Kalaignar

(E) Answer not known

தமிழ்நாடு அரசால் சிறப்பாகச் செயல்படும் நூலகர்களை பெருமைப்படுத்துவதற்காக __________ விருது வழங்கப்படுகிறது.

(A) டாக்டர்.எஸ்.ஆர். ரெங்கநாதன்

(B) திரு. கவிமணி

(C) காமராஜர்

(D) கலைஞர்

(E) விடை தெரியவில்லை

103. The eldest son of the Chola king was called to be

(A) Yuvarajan

(B) Prince

(C) King

(D) Governor

(E) Answer not known

சோழ அரசின் மூத்த மகன் ________ என அழைக்கப்பட்டார்.

(A) யுவராஜன்

(B) இளவரசர்

(C) அரசர்

(D) ஆளுநர்

(E) விடை தெரியவில்லை

104. The last dynasty of Delhi sultanate was

(A) Khalji Dynasty

(B) Lodi Dynasty

(C) Sayyid Dynasty

(D) Tughluq Dynasty

(E) Answer not known

டெல்லி சுல்தானியத்தின் கடைசி அரச மரபு

(A) கில்ஜி மரபு

(B) லோடி மரபு

(C) சையது மரபு

(D) துக்ளக் மரபு

(E) விடை தெரியவில்லை



105. Volume of a hollow sphere is $\frac{11352}{7} cm^3$. If the outer radius is 8 cm, Find the inner diameter of the sphere (Take $\pi = \frac{22}{7}$)

(A) 5 cm

(B) 10 cm

(C) 15 cm

(D) 20 cm

(E) Answer not known

ஒரு உள்ளீடற்ற கோளத்தின் கன அளவு $\frac{11352}{7}$ க.செ.மீ. மற்றும் அதன் வெளி ஆரம் 8 செ.மீ எனில் அக்கோளத்தின் உள்விட்டத்தின் அளவு காண்க.( $\pi = \frac{22}{7}$ என்க).

(A) 5 செ.மீ

(B) 10 செ.மீ

(C) 15 செ.மீ

(D) 20 செ.மீ

(E) விடை தெரியவில்லை

106. A is thrice as fast as B. If B can do a [illegible] days, then find the number of days they will take to complete the work together.

(A) 6 days

(B) 7 days

(C) 8 days

(D) 9 days

(E) Answer not known

A என்பவர் B என்பவரைக் காட்டிலும் வேலை செய்வதில் மூன்று மடங்கு வேகமானவர். B ஆனவர் ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பார் எனில், இருவரும் இணைந்து அந்த வேலையை முடிக்க எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்வர் எனக் காண்க.

(A) 6 நாட்கள்

(B) 7 நாட்கள்

(C) 8 நாட்கள்

(D) 9 நாட்கள்

(E) விடை தெரியவில்லை

107. If 81 students can do a painting on a wall of length 448 m in 56 days. Find the number of students required to do painting on a similar type of wall of length 160 m in 27 days

(A) 40

(B) 50

(C) 55

(D) 60

(E) Answer not known

81 மாணவர்கள் 448 மீ நீளமுள்ள ஒரு சுவரில் ஓர் ஓவியத்தை 56 நாட்களில் வண்ணமிடுவர். 160 மீ நீளமுள்ள அது போன்ற சுவரில் 27 நாட்களில் வரைய தேவைப்படும் மாணவர்கள் எண்ணிக்கையை காண்.

(A) 40

(B) 50

(C) 55

(D) 60

(E) விடை தெரியவில்லை



108. According to NITI Aayog 2015–16 which state place first in (NER) Net Enrolment Ratio at primary level.

(A) Tamil Nadu

(B) Kerala

(C) West Bengal

(D) Karnataka

(E) Answer not known

2015–16 - ஆம் ஆண்டு நிதி ஆயோக் அறிக்கையின்படி (NER) துவக்கநிலை நிகர மாணவர் சேர்க்கை வீதத்தின் அடிப்படையில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

(A) தமிழ்நாடு

(B) கேரளா

(C) மேற்கு வங்காளம்

(D) கர்நாடகம்

(E) விடை தெரியவில்லை

109. At whom will all the five elements of the body laugh at, according to Valluvar?

(A) Impostor/Cheat/Pretender

(B) Indisciplined

(C) Liar

(D) Uneducated

(E) Answer not known

உடலில் கலந்துள்ள பஞ்ச பூதங்களும் யாரைப் பார்த்துச் சிரிக்கும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(A) வஞ்சமனத்தான்

(B) ஒழுக்கமில்லாதான்

(C) பொய்யுரைப்பவன்

(D) கல்லாதான்

(E) விடை தெரியவில்லை

110. The primary organ infected during tuberculosis is

(A) Bone marrow

(B) Intestine

(C) Spleen

(D) Lungs

(E) Answer not known

காசநோயினால் பாதிக்கப்படும் முதன்மை உறுப்பு யாது?

(A) எலும்பு மஜ்ஜை

(B) குடல்

(C) மண்ணீரல்

(D) நுரையீரல்

(E) விடை தெரியவில்லை



111. Which tax has replaced multiple indirect taxes during 2017?

(A) Sales tax

(B) Customs duty

(C) Goods and Service tax

(D) Income tax

(E) Answer not known

இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு மறைமுக வரிகளுக்கு மாற்றாக கொண்டு 2017-ல் வரப்பட்ட புதிய வரி எது?

(A) விற்பனை வரி

(B) சுங்க வரி

(C) சரக்கு மற்றும் சேவை வரி

(D) வருமான வரி

(E) விடை தெரியவில்லை

112. The country which has Highest Human Development Index in 2021

(A) Norway

(B) Switzerland

(C) Denmark

(D) Singapore

(E) Answer not known

2021 இல் அதிக மனித வளர்ச்சிக் குறியீட்டைக் கொண்ட நாடு

(A) நார்வே

(B) சுவிட்சர்லாந்து

(C) டென்மார்க்

(D) சிங்கப்பூர்

(E) விடை தெரியவில்லை

113. The father of Green revolution in India was

(A) Mahathma Gandhi

(B) M.S. Swaminathan

(C) N.R. Viswanathan

(D) Jawaharlal Nehru

(E) Answer not known

இந்தியாவில் பசுமைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படுபவர்

(A) மகாத்மா காந்தி

(B) எம்.எஸ். சுவாமிநாதன்

(C) என்.ஆர். விஸ்வநாதன்

(D) ஜவஹர்லால் நேரு

(E) விடை தெரியவில்லை

114. Important urban agglomerations includes

(A) Coimbatore, Madurai and Tiruchirappalli

(B) Chennai, Dindigal and Periyakulam

(C) Tirunelveli, Salem and Chengalpattu

(D) Kanchipuram, Karaikkudi and Pattukottai

(E) Answer not known

முக்கிய நகர்ப்புற ஒருங்கிணைப்பு உள்ள மாவட்டங்கள்.

(A) கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி

(B) சென்னை, திண்டுக்கல் மற்றும் பெரியகுளம்

(C) திருநெல்வேலி, சேலம் மற்றும் செங்கல்பட்டு

(D) காஞ்சிபுரம், காரைக்குடி மற்றும் பட்டுக்கோட்டை

(E) விடை தெரியவில்லை



115. ———— hailed the Pandyan Kingdom as 'the richest and the most splendid province in the world'.

(A) Fahien

(B) Marco Polo

(C) Megasthanese

(D) Hieun Tsang

(E) Answer not known

பாண்டிய அரசு "செல்வ செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்" என புகழ்ந்து கூறிய அறிஞர் ———— ஆவார்.

(A) பாஹியான்

(B) மார்க்கோ போலோ

(C) மெகஸ்தனிஸ்

(D) ஹுவான் சாங்

(E) விடை தெரியவில்லை

116. The oldest Dravidian language is

(A) Malayalam

(B) Telugu

(C) Tamil

(D) Hindi

(E) Answer not known

பழமையான திராவிட மொழி ———— ஆகும்.

(A) மலையாளம்

(B) தெலுங்கு

(C) தமிழ்

(D) இந்தி

(E) விடை தெரியவில்லை

117. What is the difference between the L.C.M and H.C.F of the three numbers 60, 75 and 90?

(A) 895

(B) 899

(C) 845

(D) 885

(E) Answer not known

60, 75 மற்றும் 90 ஆகிய மூன்று எண்களின் மீச்சிறு பொதுமடங்கு மற்றும் மீப்பெரு பொது வகுத்தி இவற்றிற்கிடையேயான வித்தியாசம் என்ன?

(A) 895

(B) 899

(C) 845

(D) 885

(E) விடை தெரியவில்லை

118. The volume of a solid right circular cone is 11088 $cm^3$. If it's height is 24 cm then find the radius of the cone.

(A) 20 cm

(B) 21 cm

(C) 19 cm

(D) 18 cm

(E) Answer not known

ஒரு நேர்வட்டக் கூம்பின் கன அளவு 11088 செ.மீ$^3$ ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க.

(A) 20 செ.மீ

(B) 21 செ.மீ

(C) 19 செ.மீ

(D) 18 செ.மீ

(E) விடை தெரியவில்லை



119. Amutha can weave a Saree in 18 days. Anjali is twice as good weaver as Amutha. If both of them weave together, then in how many days can they complete weaving the saree?

(A) 9 days

(B) 6 days

(C) 5 days

(D) 4 days

(E) Answer not known

அமுதா ஒரு சேலையை 18 நாள்களில் நெய்வார், அஞ்சலி, அமுதாவை விட நெய்வதில் இருமடங்கு திறமைசாலி. இருவரும் இணைந்து நெய்தால், அந்தச் சேலையை எத்தனை நாட்களில் நெய்து முடிப்பர்?

(A) 9 நாட்கள்

(B) 6 நாட்கள்

(C) 5 நாட்கள்

(D) 4 நாட்கள்

(E) விடை தெரியவில்லை

120. No of subjects consists in the Union list enumerated in the 7th schedule of Indian constitution for division of powers

(A) 61 (B) 52

(C) 96 (D) 100

(E) Answer not known

இந்திய அரசியலமைப்பில் அதிகாரங்களின் பிரிவில் ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மத்தியப் பட்டியலில் எத்தனை இனங்கள் உள்ளன?

(A) 61 (B) 52

(C) 96 (D) 100

(E) விடை தெரியவில்லை

121. Which tax is the different one?

(A) Wealth Tax

(B) Income Tax

(C) Corporate Tax

(D) Stamp duty

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றில் மாறுபட்ட வரி எது?

(A) செல்வ வரி

(B) வருமான வரி

(C) நிறுவன வரி

(D) முத்திரைத் தாள் வரி

(E) விடை தெரியவில்லை



122. What four blames will stay with an adulterer?

(A) Delight, Distress, Happiness and Material wealth

(B) Enmity, Pretence, Fear and Guilt

(C) Wealth, Pride, Splendour and Greatness

(D) Poverty, Distress, Blame and Disease

(E) Answer not known

பிறனில் விழைவானிடத்து எவை நான்கு நீங்காது இருக்கும்?

(A) இன்பம், துன்பம், மகிழ்ச்சி, பொருள்

(B) பகை, பாவம், அச்சம், பழி

(C) பொருள், பெருமை, சிறப்பு, மேன்மை

(D) வறுமை, துன்பம், பாவம், நோய்

(E) விடை தெரியவில்லை

123. How does Valluvar compare the wealth of a stingy person?

(A) Similar to a fruit tree at the center of home town

(B) Similar to the hidden wealth that goes in vain

(C) Similar to weeds not having values

(D) Like a poisonous tree bearing fruit in the middle of a town

(E) Answer not known

பிறரால் விரும்பப்படாதவன் செல்வத்தைத் திருவள்ளுவர் எதற்கு ஒப்பாகக் கூறுகின்றார்?

(A) ஊர் நடுவில் இனிய மரம் பழுத்தது போன்றது

(B) யாருக்கும் பயன்படாது புதைத்து வைக்கும் செல்வத்துக்கு ஒப்பாகும்

(C) களைகளைப் போன்று பயனற்றதாம்

(D) ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது

(E) விடை தெரியவில்லை



[Turn over

124. ________ is the Human space flight mission by ISRO which will demonstrate taking humans to space in low orbit.

(A) NASA
(B) Space-X
(C) Gaganyaan
(D) Apollo - II
(E) Answer not known

கீழ்க்கண்டவற்றுள் இஸ்ரோவின் எந்தத் திட்டம் மனிதர்களை விண்வெளிக்குக் குறைந்த சுற்றுப்பாதையில் அழைத்துச் செல்வதை நோக்கமாக கொண்டுள்ளது?

(A) நாஸா
(B) ஸ்பேஸ்-எக்ஸ்
(C) ககன்யான்
(D) அப்போலோ - II
(E) விடை தெரியவில்லை

125. In which year did the Disaster Management Act came into force?

(A) 2004
(B) 2005
(C) 2006
(D) 2007
(E) Answer not known

பேரிடர் மேலாண்மைச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?

(A) 2004
(B) 2005
(C) 2006
(D) 2007
(E) விடை தெரியவில்லை



126. Match the following :

(a) Biological Diversity Act — 1. 1972
(b) National green Tribunals — 2. 2010
(c) The Environment Protection Act — 3. 2002
(d) Wild life Protection Act — 4. 1986

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) Answer not known

கீழ்க்காண்பவற்றைச் சரியாகப் பொருத்துக :

(a) உயிரியல் பன்முகத்தன்மை சட்டம் — 1. 1972
(b) தேசிய பசுமை தீர்ப்பாயங்கள் — 2. 2010
(c) சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் — 3. 2002
(d) வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் — 4. 1986

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

127. ________ instructed for his mausoleum was that it should incorporate elements from different religions including Islam and Hinduism.

(A) Ashoka

(B) Akbar

(C) Shahjahan

(D) Aurangazeb

(E) Answer not known

இஸ்லாம், இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்தக் கூறுகள் தன் கல்லறையில் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தியவர்

(A) அசோகர்

(B) அக்பர்

(C) ஷாஜஹான்

(D) ஔரங்கசீப்

(E) விடை தெரியவில்லை

128. Where is the famous pilgrim spot of Sikhs located in India?

(A) Manali

(B) Patna

(C) Amritsar

(D) Jalandhor

(E) Answer not known

இந்தியாவில் அமைந்துள்ள, சீக்கியர்களின் புகழ்பெற்ற யாத்திரைத் தலம்

(A) மணாலி

(B) பாட்னா

(C) அமிர்தசரஸ்

(D) ஜலந்தர்

(E) விடை தெரியவில்லை



129. There are 50 students in a class. If 14% are absent on a particular day, find the number of students present in the class

(A) 41 (B) 42

(C) 43 (D) 44

(E) Answer not known

ஒரு வகுப்பில் 50 மாணவர்கள் உள்ளனர். ஒரு குறிப்பிட்ட நாளில் 14% பேர் வருகை புரியவில்லை எனில், வருகை புரிந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

(A) 41 (B) 42

(C) 43 (D) 44

(E) விடை தெரியவில்லை

130. Find the GCD of : $(y^3+1)$ and $(y^2-1)$

(A) $(y^2+1)$

(B) $(y+1)$

(C) $(y-1)$

(D) $(y+1)^2$

(E) Answer not known

$(y^3+1)$ மற்றும் $(y^2-1)$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியைக் காண்க.

(A) $(y^2+1)$

(B) $(y+1)$

(C) $(y-1)$

(D) $(y+1)^2$

(E) விடை தெரியவில்லை

131. If $P$ denotes ÷, $Q$ denotes ×, $R$ denotes +, $S$ denotes −, then the value of 18Q12P4R5S6 is

(A) 50

(B) 53

(C) 54

(D) 59

(E) Answer not known

$P$ என்பது '÷' என்பதையும், $Q$ என்பது '×' என்பதையும், $R$ என்பது '+' என்பதையும், $S$ என்பது '−' என்பதையும் குறித்தால், 18Q12P4R5S6 என்பதன் மதிப்பு.

(A) 50

(B) 53

(C) 54

(D) 59

(E) விடை தெரியவில்லை

132. 4 P + S r q B # A 3 ? 7 C > Z % 6 d & Q @ 1

Which element is seventh to the left of sixteenth element from the left in the above series?

(A) A

(B) C

(C) Z

(D) S

(E) Answer not known

4 P + S r q B # A 3 ? 7 C > Z % 6 d & Q @ 1

